சரியாக இணைத்து மீண்டும் எழுதுக : **<u>வரலாற்று இடங்களைச் சுற்றிப் பார்ப்பதால் ஏற்படும் நன்மைகள்</u>**

முன்னுரை

சுற்றுலா செல்வது சிறந்த மகிழிகளில் ஒன்று.கிணற்றுத் தவளையாக இருப்பதைத் தவிர்க்கலாம்

ஒவ்வோர் இடத்தின் தோற்றம்,ஆக்கம்,வாழ்ந்த மக்கள் அனைத்தையும் அறியலாம்

வேறுபட்ட மக்களின் கலை,பண்பாடு,மொழி,ஒற்றுமை வேற்றுமை ஆகியவற்றை அறியலாம்.

நாகரிக வளர்ச்சி, தேவையான தகவல்கள் கற்றலுக்குத் தேவையாக அமையும்

முடிவுரை

சுற்றுலாச் செல்லல் நாகரிக வளர்ச்சியாக உருமாறி உள்ளது. மாணவர்கள், ஆய்வாளர்கள்,அகழ்வாராய்ச்சி செய்வோருக்குச் சுற்றுலாச் செல்வது ஓர் அடிப்படைத் தேவையாகி விட்டது. சுற்றுலா வழி பெறும் தகவல்கள் கற்றலுக்குப் பேருதவி புரியும்.நாம் கல்விகேள்வியில் சிறக்கச் சுற்றுலா துணை நிற்கும்.

நாம் வரலாற்று இடங்களைச் சுற்றிப் பார்ப்பதால் அந்த இடத்தின் தோற்றம், ஆக்கம், வாழ்ந்த மக்கள் அனைத்தையும் அறியலாம்.இதற்கு மலாக்காவை உதாரணமாகக் கூறலாம்.மலாக்கா,மீன்பிடி கிராமமாக விளங்கியது. வணிகர்களின் வருகையால் துறைமுகமாய் உருமாறியது. மலாக்காவின் 'ஆபாமோசா' கோட்டை சுற்றுலாப் பயணிகளின் மனதைக் காந்தம் இரும்பைக் கவர்வது போல் சுண்டி இழுப்பது கண்கூடாகும். இவ்வாறு ஓர் இடம் சார்ந்த அறிவைப் பெருக்கிக் கொள்வதே வரலாற்று இடங்களைச் சுற்றிப் பார்ப்பதால் கிட்டும் நன்மை ஆகும்.

இவ்வண்ணம்,பல பயன் தரும் வரலாற்று இடங்களுக்குச் சுற்றுலாவை மேற்கொண்டு வரலாற்றுத் தகவல் நிறைந்த .மாந்தராய் உலா வருவோமாக .

மேலும்,வரலாற்று இடங்களைச் சுற்றிப் பார்ப்பது சிறந்த மகிழிகளில் ஒன்றாகும். மக்களுக்குப் பொது விடுமுறை,விழாக்கால விடுமுறை என ஓய்வு பெறும் வாய்ப்பு உண்டு. இது போன்ற நாள்களில் வரலாற்று இடங்களைச் சுற்றிப் பார்த்து நேரத்தைப் பயனுள்ள வழியில் கழிக்கலாம். இவ்வாறு சுற்றுலா மேற்கொள்வதால் காலம் பொன் போன்றது என்பதைப் பலரும் அறிவர். சுற்றுலா செல்வதால் கிணற்றுத் தவளையாக இருப்பதைத் தவிர்க்கலாம்.

இவ்வையகத்தார் சீனப்பெருஞ்சுவர்,மச்சுப்பிச்சு,சிசென் இட்ஸா போன்ற வரலாற்று இடங்களைச் சுற்றிப்பார்க்க பெரிதும் விரும்புகின்றனர்.இதன் வழி வேறுபட்ட மக்களின் கலை,பண்பாடு,மொழி,ஒற்றுமை வேற்றுமை ஆகியவற்றை அறிவர்.இவர்கள் தேசங்கள் தோறும் பாஸைகள் வேறு என பல மொழிக் கற்க வரலாற்று இடங்களைச் சுற்றிப் பார்ப்பதால் கிடைக்கும் நன்மையாகும்..

சுற்றலா செல்வது நல்ல பொழுது போக்காகும். பலர் சுற்றுலா மேற்கொண்டு மன இறுக்கத்தை நீக்கிக் கொள்கின்றனர். மலேசியர்கள் குடும்பத்துடன் சரித்திர புகழ் மிக்க தலங்களுக்குச் சுற்றுலாச் செல்வதைப் பெரிதும் விரும்புகின்றனர்.

LIVEWORKSHEETS